**<u>முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்</u>**

**<u>S.C. No. 39/2024</u>**

**LW 1 (PW1)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்ராயலு | தொழில் | |
| த/பெ | | தேதி | 12.01.2026 |
| ஊர் | | வயது | |
| மாவட்டம்: | | | |

(12.01.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

4,5, 6,7,11, 12 எதிரிகள்ஆஜர். **3,8,9 ,10** எதிரிகள் ஆஜரில்லை பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் பி.ஏ.பி.எல் படித்துள்ளேன். நான் விவசாயம் மற்றும் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். நான் 14.10.2013 ம் தேதியிலிருந்து 11 வருடங்களாக வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் நான் தான் புகாரினை எனது கைப்பட எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளாக காண்பிக்கப்பட்ட நபர்கள் யாரும் சொரப்பூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஜோதி என்பவவர் சொரப்பூர் கிராமத்தை சேர்ந்தவர் மற்றவர்கள் சொரப்பூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் இல்லை. நான் புகாரினை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். இந்த புகாரை வழக்கு சம்பவத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதாகவோ மருத்துவமனையில் சென்று சிகிச்சை பெற்றதாகவோ சொல்லப்படவில்லை என்றால் சரி. எனது புகாரில் எதிரிகளுக்கும் எனக்கும் முன் விரோதம் உள்ளது என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. இந்த வழக்கு புகாருக்கு முன்பாக இந்த வழக்கில் சில எதிரிகள் மீது வளவனூர் காவல்

நிலையத்தில் நான் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு நியாபகம் இல்லை. நான் 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது வளவனூர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்து அதன் பேரில் குற்ற எண் 268/2004 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. இந்த புகார்களை தவிர்த்து மேலும் 2 புகார்கள் எனது சகோதரர்கள் பன்னீர்செல்வம் மற்றும் பால சுப்ரமணியம் ஆகியோர்கள் 1 முதல் 4 வரையிலான எதிரிகள் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரிகளும் எங்கள் மீது 4 புகார்கள் அளித்து அதன் பேரில் 4 முதல் தகவல் அறிக்கை எங்கள் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. வழக்கு மற்றும் எதிர் வழக்காக இரண்டும் ஒரே தேதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. வளவனூர் காவல் நிலைய போலிசார் மேற்சொன்ன 8 குற்ற வழக்குகளையும் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கினை தவிர்த்து 7 வழக்குகள் குற்றம் நிருபிக்க படவில்லை என்ற காரணத்தினால் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் விழுப்புரம் என்பவரால் தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த வழக்கின் எதிர்வழக்காக அதே தேதியில் குற்ற எண். 909/2004 என்ற வழக்கு எனது பேரிலும் எனது அண்ணன் சுப்ரமணியன் என்பவர் பெயரிலும் பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. குற்ற எண். 909/2004 என்ற வழக்கில் புகார்தாரர் இந்த வழக்கில் இறந்துபோன 1வது எதிரி வரதராமானுஜம் என்றால் சரி. 21.10.2004 ம் தேதி வரதராமானுஜம் என்பவரை இரும்பு பைப்பினால் மூக்குச மற்றும் முகத்தில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் மார்பில் வலி இருப்பதாகவும் அதில் சொல்லப்பட்டிருந்தது என்றால் சரி அதற்காக அவர் அரசு மருத்துவமனையில் அன்றைய தினமே சிகிச்சை பெற்று வந்ததாக அந்த வழக்கில் சொல்லப்பட்டிருந்தது என்றால் சரி. குற்ற எண் 908/2004, 909/2004 ஆகிய இரண்டு முதல் தகவல் அறிக்கையும் தலைமை காவலர் ஷர்மா என்பவர் தான் பதிவு செய்தார் என்றால் சரி. நான் முதல் தகவல் அறிக்கையின் நகலை கேட்டு பெறவில்லை என்றால் இல்லை. எனது புகாரில் 1 முதல் 4 வரையிலான எதிரிகள் பெயரை தவிர

வேறு எதிரிகள் பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. ஜோதி , வரதராமானுஜம் ஆகியோர் பற்றி அவர்கள் செய்த குற்ற செய்கையை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றாலும் மற்ற எதிரிகளின் குற்ற செய்கை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரி. என்னை போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தபோதும் மற்ற எதிரிகளின் குற்ற செய்கை பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரி. மற்ற எதிரிகளின் ஆஜர் தன்மை பற்றியும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. 8 வழக்குகளில் இந்த வழக்கு தான் கடைசியாக விசாரணை செய்யப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரி. இந்த வழக்க பொறுத்த மட்டில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்ற சிறு வழக்கு எண் 3067/2004 என்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் சரி. எதிரிகளின் பெயர் விடுப்பட்டுள்ளது என்றும் அவர்களையும் சேர்க்க வேண்டும் என்று கூறி நான் எந்த வித மனுவும் மறு விசாரணை கோரி தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி. முதன் முறையாக 19.09.2005 ம் தேதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல் முறையாக சாட்சியம் அளிக்கும்போதுதான் மற்ற எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு சொன்னேன் என்றால் சரி. குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றததில் நான் அ ளித்த முதல் விசாரணை சாட்சியத்தில் எனக்கு காயம் அதிகமாக இருந்ததால் நான் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை, தனியார் மருத்துவமனைக்கு சென்றேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரி. 2004 ம் வருடம் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் எனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றாலும் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டதாக நான் சொல்வது தவறு என்றாலும் சரியல்ல நான் அரசு மருத்துவமனைக்கு சென்ற போது அங்கு ஏற்கனவே காயம் அடைந்திருந்த வரதராமனுஜம் என்பவர் சிகிச்சையில் இருப்பதால் இருவரும் அடித்துக் கொள்வீர்கள் என்பதால் வேறு எங்காவது சிகிச்சை எடுத்து கொள்ளுமாறு வளவனூர் காவல் நிலைய போலிசார் என்னிடம் கூறியதால் நான் அங்கு சிகிச்சை பெறவில்லை. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போதும் இந்த

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போதும் நான் சிகிச்சை பெற்ற மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யவில்ல என்று சொன்னால் சரி. வழக்கு எதிரியாக குற்றம் சாட்டப்பட்ட அண்ணாதுரை என்பவர் ஈஜடி பாரிஸ் சக்கரை ஆலை, நெல்லிக்குப்பத்தில் பணி புரிந்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். ஜானகிராமன் என்பவர் இந்திய ராணுவத்தில் பணி செய்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரி. அண்ணாதுரை, ஸ்டாலின் என்பவரது சகோதரிகள் மற்றும் அவர்களது கணவர்களை இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சேர்த்துள்ளேன். ஜானகிராமன் என்பவரது மனைவி பெயர் ஜோதிலட்சுமி. அண்ணாதுரை ஸ்டாலின் என்பவரது மற்றொரு சகோதரி மணிமேகலை என்பவரது கணவர் பெயர் எனக்கு சரியாக நியாபகமில்லை. அவர் எங்கு வசித்து வருகிறார் என்றும் என்ன தொழில் செய்து வருகிறார் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரி. இந்த வழக்கு மூலமானது விவசாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக தான் என்றால் சரி. இந்த வழக்கின் எதிரி ஜானகிராமன் என்பவருக்கு சொரப்பூர் கிராமத்தில் விவசாயம் நிலம் உள்ளது என்றால் சரி. ஜானகிராமன் என்பவர் ராணுவத்தில் பணி புரிந்த காரணத்தினால் உள்ளூரில் உள்ள கிராமத்தினர் துணையோடு விவசாயம் செய்து வந்தார் என்றால் சரி. அவரது விவசாய நிலத்தில் வேலை செய்த திருமதி. ஜோதி, சக்திவேல், வீரப்பன், ஆகியோர்களை விவசாய பணிகளை மேற்கொள்ள விடாமல் நானும் எனது குடும்பத்தினரும் இடையூறு செய்வதாக மாவட்ட ஆட்சியருக்கு மேற்சொன்ன ஜானகிராமன் 15.07.2004 ம் தேதி ஒரு கடிதம் ஒன்றை தனது ராணுவ அலுவலகம் மூலமாக அனுப்பி வைத்தார் என்றும், அதில் எனது பெயரையும் ஒரு எதிரியாக சேர்த்திருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்திற்கும் வரதராமானுஜம் குடும்பத்திற்கும் இடையே விவசாயம் செய்யும்போது தொடர்ந்து பிரச்சனைகள் ஏற்படுவதால் சட்டம் ஒழுங்கு ஏற்படுவதாக கூறி வளவனூர் காவல் நிலைய அதிகாரி எங்கள் இரு தரப்பினரையும் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தி அதன் பேரில் விசாரணை நடைபெற்றது என்றால் சரி. 15.07.2004 ல் ஜானகி ராமன்

என்பவர் கொடுத்த புகாரின் விவரத்தை அறிந்து தான் குற்றஎ ண் 908/2004 ன் கீழ் வழக்கு புகாரில் ஜானகிராமன் அவரது மனைவி அவ்வாறே எதிரி மணிமேகலை மற்றும் அவரது கணவர் ஆகியோர்களை கூடுதல் எதிரிகளாக சேர்த்து பழி வாங்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உரிமையியல் பிரச்சனை சம்மந்தப்பட்ட சம்பவத்தை குற்றவியல் வழக்காக மாற்றி தவறான புகார் கொடுக்கப்பட்டதாக இவ்வழக்கின் எதிரி வரதராமானுஜம் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்ற பல்வகை மற்றும் சீராய்வு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரி. அந்த மனுவில் விசாரணைக்கு முன்பாகவே இறந்துவிட்டதால் அந்த மனுக்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 21.10.2004 ம் தேதி காலை 10.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக நான் சொல்வது தவறு என்று சொன்னாலும், எதிரிகள் யாரும் அவ்வாறான குற்ற செயல்களில் ஈடுபடவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கில் கூடுதல் எதிரியாக சேர்க்கப்பட்ட ஜானகிராமன் 31.10.2004 ம் தேதி தான் ராணுவ பணியில் இருந்தும் விடுவிக்கப்ட்டார் என்றும், அவ்வாறே இவ்வழக்கில் மற்றொரு எதிரியான அண்ணாதுரை 21.10.2004 ம் தேதி காலை 07.56 முதல் 17.08 மணி வரை நெல்லிக்குப்பம் சக்கரை ஆலையில் பணியில் இருந்தார் என்றாலும் நான் பழி வாங்கும் நோக்கத்துடன் அவர்கள் பெயரையும் சேர்த்து தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிலத்திற்கு அருகாமையில் உள்ள நிலத்திற்கு தொடர்ந்து விவசாயம் செய்துவரும் இவ்வழக்கின் 3, 4 மற்றும் 9 எதிரிகளை விவசாயத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 எதிரிகளின் சகோதரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் அப்பொழுது அவர்கள்சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. 22 ஆண்டுகளாக எதிரிகளை பொய் வழக்கு புனைந்து அவர்களை மன உளைச்சல் ஏற்படுத்தியதற்கு நான் தான் பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. வரதராமனுஜம் காயமடைந்து மருத்துவமனையில்

சிகிச்சையில் இருப்பதை போலிசார் புகார் பெற்றதை அறிந்து அவ்வழக்கில் இருந்து தப்பித்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த வழக்கின் புகாரை நான் தவறாக தாக்கல் செய்தேன் என்றாலும் நான் கூறுவது போல் எந்த வித குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையை நிர்பந்தம் படுத்தி தான் இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவைத்தேன் என்றால் சரியல்ல.

**<u>5வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அண்ணாதுரை என்பவரது மாமனார் பெயர் தெரியுமா என்றால் அவரது பெயர் கலிவரதன். அவர் புதுவை மாநிலம் திருபுவனையில் வசித்து வருகிறார். போலிசார் விசாரணையில் அண்ணாதுரை ஸ்டாலின் ஆகியோர்களின் மனைவிகளையயோ மாமனார்களையோ என் முன்னிலையில் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. அண்ணாதுரை என்பவரது மாமனார் பெயர் கலிவரதன் இல்லை என்றாலும் நான் தவறாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல. குடும்பம் பழி வாங்குதல் காரணமாக தான் வேங்கடவரதன் என்பவரது பெயரை கலிவரதன் என்று நான் தவறாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல ஆஜர் எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து செய்யப்பட்டது.

(Sd/- M.S. Varalakshmi)
முதலாவது கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,

விழுப்புரம்